**தினமணி (23.03.2025)**

# பொன்னியாகவுண்டன் புதூரில் இலவச மருத்துவ முகாம்




கரூர் மாவட்டம், பொன்னியாகவுண்டன்புதூரில் சனிக்கிழமை நடைபெற்ற மருத்துவ முகாமில் நோயாளிகளை பரிசோதித்த மருத்துவர்கள்.

**கரூர், மார்ச் 22:** புகழூர் டிஎன்பிஎல் ஆலை சார்பில் பொன்னியாகவுண்டன்புதூரில் இலவச மருத்துவ முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் கீழ் பொதுமக்களின் உடல்நலனை பேணுவதற்காக தினமும் நடமாடும் இலவச மருத்துவ முகாமை மார்ச் 21-ஆம் தேதி தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் சந்தீப் சக்சேனா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதையடுத்து முகாம், புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி, வேட்டமங்கலம், புன்னம், கோம்புப்பாளையம், நஞ்சைப்புகழூர் மற்றும் திருக்காடுதுறை ஆகிய ஊராட்சி பகுதிகளில் உள்ள 50 கிராமங்களில் நடைபெற்றது.

இந்நிலையில் பொன்னியாகவுண்டன்புதூரில் சனிக்கிழமை மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாம் குறித்து ஆலை அதிகாரிகள் கூறியது, இதுவரை 35 இடங்களில் 26 நாள்கள் நடைபெற்ற மருத்துவ முகாமில் 1,228 பொதுமக்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும், தேவைப்பட்டோருக்கு மருந்து, மாத்திரைகளும் காகித நிறுவனத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது என்றனர் அவர்கள்.